சூரிய பிரபையில்...



சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி கோயில் பிரம்மோற்சவத்தின் 4 –ஆம் நாளான திங்கள்கிழமை சூரிய பிரபையில் அருள்பாலித்த உற்சவர்.

# கச்சபேசுவரர் கோயில் வெள்ளித் தேரோட்டம்

**காஞ்சிபுரம், மே 4:** காஞ்சிபுரம் கச்சபேசுவரர் கோயிலில் சித்திரைத் திருவிழாவையொட்டி ஞாயிற்றுக்கிழமை வெள்ளித் தேரோட்டம் நடைபெற்றது.

இக்கோயில் சித்திரைத் திருவிழா கடந்த ஏப்ரல் 24–ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதன் தொடர்ச்சியாக சுவாமியும், அம்மனும் தினசரி பல்வேறு வாகனங்களில் அலங்காரமாகி நகரில் ராஜவீதிகளில் வீதியுலா வந்தனர்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான திருக்கல்யாணம் ஏப்.29 ஆம் தேதி மகாரதம் எனும் தேரோட்டம் ஏப்.30 ஆம் தேதியும் நடைபெற்றது.

10–ஆவது நாள் நிகழ்ச்சியாக ஞாயிற்றுக்கிழமை வெள்ளித் தேரோட்டம் நடைபெற்றது. வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளித் தேரில் உற்சவர் கச்சபேசுவரரும், சுந்தராம்பிகையும் எழுந்தருளி அருள்பாலித்தனர்.

செவ்வாய்க்கிழமை பஞ்சமூர்த்திகள் உற்சவமும், மே.7–ஆம் தேதி 108 சங்காபிஷேகமும் நடைபெறுகிறது. வரும் மே 9–ஆம் தேதி ஊஞ்சல் உற்சவத்துடன் திருவிழா நிறைவு பெறுகிறது. ஏற்பாடுகளை நகர செங்குந்த மகாஜன சங்கத்தினர் மற்றும் கோயில் செயல் அலுவர் திவ்யா ஆகியோர் செய்திருந்தனர்.



காஞ்சிபுரம் கச்சபேசுவரர் கோயிலில் நடைபெற்ற வெள்ளித் தேரோட்டம்

# இன்று 7 மாவட்டங்களுக்கு பலத்த மழை எச்சரிக்கை



**சென்னை, மே 4:** தமிழகத்தில் தேனி, திண்டுக்கல், கரூர், திருச்சி உள்பட 7 மாவட்டங்களுக்கு செவ்வாய்க்கிழமை (மே 5) பலத்த மழைக்கான மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் சார்பில் திங்கள்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

மகாராஷ்டிரத்தின் விதர்பா முதல் குமரி கடல் வரை தெலங்கானா, ராயலசீமா, உள் தமிழகம் வழியாக வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் செவ்வாய்க்கிழமை (மே 5) முதல் மே 10 வரை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும்.

குறிப்பாக, தேனி, திண்டுக்கல், கரூர், திருச்சி, நாமக்கல், ஈரோடு, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் செவ்வாய்க்கிழமை இடி மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். தொடர்ந்து, புதன்கிழமை (மே 6), கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, திருப்பூர், தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்யக் கூடும்.

மேலும், வியாழக்கிழமை (மே 7) கோவை மாவட்ட மலை பகுதிகள், நீலகிரி, திருப்பூர், தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, தருமபுரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் ஒருசில இடங்களில் பலத்த மழை பெய்யக்கூடும். எனவே அந்த மாவட்டங்களுக்கு 3 நாள்களும் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**வெப்ப அளவு:** தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்சமாக வெப்பநிலை ஒருசில இடங்களில் செவ்வாய்க்கிழமை சற்று அதிகமாக இருக்கும்.

திங்கள்கிழமை அதிகபட்சமாக வேலூரில் 103.64 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பநிலை பதிவானது. திருச்சி, ஈரோடு–102.2, சென்னை மீனம்பாக்கம்–101.66, நாமக்கல், திருப்பத்தூர்–100.22, சென்னை நுங்கம்பாக்கம், தஞ்சை–100.4 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பநிலை பதிவானதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஏழுமலையான் தரிசனம்: 8 மணி நேரம் காத்திருப்பு

**திருப்பதி, மே 4:** திருமலை ஏழுமலையானை தரிசிக்க பக்தர்கள் தர்ம தரிசனத்தில் 8 மணி நேரம் காத்திருந்தனர்.

திருமலையில் திங்கள்கிழமை காலை நிலவரப்படி, வைகுண்டம் காத்திருப்பு அறைகளில் உள்ள 10 அறைகளில் பக்தர்கள் ஏழுமலையான் தரிசனத்துக்காக காத்திருந்தனர்.

தர்ம தரிசனத்துக்கு (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) 8 மணி நேரமும், ரூ.300 விரைவு தரிசனத்துக்கு 3 முதல் 4 மணி நேரமும் ஆனது.

நேரடி இலவச தரிசன டோக்கன்கள் வழங்குவதை வெள்ளிக்கிழமை முதல் கோடை விடுமுறை முடியும் வரை தேவஸ்தானம் ரத்து செய்துள்ளது.

அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணி வரை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், பக்தர்களும், அவர்களின் பெற்றோர்களும், இரவு 10 மணி வரை அனைத்து பக்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். எனினும் அலிபிரி வழியில் திவ்ய தரிசன டோக்கன்கள் வழங்குவது ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஏழுமலையானை ஞாயிற்றுக்கிழமை முழுவதும் 83,098 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; இவர்களில் 37,187 பேர் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

உண்டியல் மூலம் பக்தர்கள் சமர்ப்பித்த காணிக்கைகளைக் கணக்கிட்டதில், ரூ. 5.06 கோடி வசூலானதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

இனி தரிசன டிக்கெட்டுகள் இல்லாமல் ஏழுமலையான் தரிசனத்துக்காக திருமலைக்கு வரும் பக்தர்கள் காத்திருப்பு அறைகளில் காத்திருந்து மட்டுமே தரிசனத்துக்குச் செல்ல முடியும். எனவே பக்தர்கள் தங்கள் பயணத்தை திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

# பி.இ., பி.டெக். சேர்க்கை: 2 –ஆம் நாளில் 11,345 மாணவர்கள் விண்ணப்பப் பதிவு

**சென்னை, மே 4:** பொறியியல் கல்லூரிகளில் பி.இ., பி.டெக். படிப்புகளில் அரசு ஒதுக்கீடு இடங்களுக்கு நிகழ் கல்வி ஆண்டு சேர்க்கைக்கு இரண்டாம் நாளாக திங்கள்கிழமை 11,345 மாணவர்கள் இணையவழியில் பதிவு செய்தனர்.

தமிழகத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், அண்ணா பல்கலைக் கழக வளாகப் பொறியியல் கல்லூரிகள் மற்றும் அதன் உறுப்பு பொறியியல் கல்லூரிகள், அண்ணாமலை பல்கலைக்கழகம், சுயநிதி பொறியியல் கல்லூரிகள் ஆகியவற்றில் பி.இ., பி.டெக். இளநிலை பொறியியல் படிப்புகளின் அரசு ஒதுக்கீடு இடங்களில் சேருவதற்கான கலந்தாய்வுக்கு இணையவழியில் விண்ணப்பப் பதிவு மே 3– ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) முதல் தொடங்கியது.

முதல் நாள் 8,505 மாணவர்கள் விண்ணப்பங்களைப் பதிவு செய்தனர். இரண்டாம் நாள் மே 4 –ஆம் தேதி ஒட்டு மொத்தமாக 19,850 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டன. அதன்படி, இரண்டாம் நாளில் மட்டும் 11,345 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். இவர்களில் 3,477 மாணவர்கள் கட்டணங்களைச் செலுத்தியுள்ளனர். 1,057 மாணவர்கள் கட்டணம் மற்றும் சான்றிதழ் பதிவேற்றம் உள்ளிட்ட ஒட்டுமொத்த பணிகளை நிறைவு செய்துள்ளனர் என்று தொழில்நுட்பக் கல்வி இயக்கக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவை வடக்கு: வானதி சீனிவாசனுக்கு 3–ஆம் இடம்



**கோவை, மே 4:** தமிழகத்தின் விஐபி தொகுதிகளில் ஒன்றான கோவை வடக்குத் தொகுதியில் தவெக வேட்பாளர் வி.சம்பத்குமார் 21,992 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் துரை செந்தமிழ்ச்செல்வனை தோற்கடித்தார்.

இந்தத் தொகுதியில் போட்டியிட்ட பாஜக தேசிய மகளிர் அணித் தலைவரான வானதி சீனிவாசன் 49,722 வாக்குகள் பெற்று 3–ஆம் இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

கடந்த முறை கோவை தெற்குத் தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற வானதி சீனிவாசன், இந்த முறை அதிமுக கூட்டணி சார்பில் கோவை வடக்குத் தொகுதியில் களம் இறங்கினார். இத்தொகுதியில் பதிவான வாக்குகள் 25 சுற்றுகளாக எண்ணப்பட்டன.

முதல் சுற்றில் இருந்தே ஆதிக்கம் செலுத்தி வந்த தவெக வேட்பாளர் வி.சம்பத்குமார் 92,500 வாக்குகள் பெற்று 21,992 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் துரை செந்தமிழ்ச்செல்வனை வென்றார். துரை செந்தமிழ்ச்செல்வன் 70,508 வாக்குகளும், பாஜகவின் வானதி சீனிவாசன் 49,722 வாக்குகளும் பெற்றனர். நாம் தமிழர் கட்சி வேட்பாளர் நர்மதா 9,036 வாக்குகள் பெற்றார்.


**எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

தலைமை அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002. போன் : 044-4299 5000 / 044-4299 5050

**அசையா சொத்து விற்பதற்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு**

SARFAESI சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 விதிகள் 8(6) & 9-ன் கீழ்

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள், இணை கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால் கீழே விரிவாக குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துகள் ஈட்டுறுதி கடன் அளித்தவருக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ளது. எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு செலுத்த வேண்டிய 30/04/2026 அன்று வரை உள்ள ரூ.29,86,05,009/- (ரூபாய் இருபத்து ஒன்பது கோடியே எண்பத்து ஆறு லட்சத்து ஐந்தாயிரத்து ஒன்பது மட்டும்) மேலும் 01/05/2026 முதல் பின் வட்டியுடன் சேர்த்து கடன்தாரர்கள்/ இணை கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களான 1. M/s.பர்வீன் டிராவல்ஸ் பிரைவேட் லிமிடெட், பிரதிநிதியாக அதன் நிர்வாக இயக்குனர் AB. டவர்ஸ், கதவு எண் : 148, பெரம்பூர் பேரக்ஸ் சாலை, புரசைவாக்கம், சென்னை-600007, 2. திரு.A.அஸ்லாம், 3.திரு.A.அஃப்சல், 4. திரு.A.ஆரிஃப், 5.திரு.A.சாதிக், வரிசை எண் 2 முதல் 5 வரை முகவரி : எண் 31, காரியப்பா தெரு, புரசைவாக்கம், சென்னை - 600 007 ஆகியோர்களிடமிருந்து வசூலிப்பதற்காக எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அதிகாரபூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்ட சொத்தினை "எங்கு உள்ளதோ அங்கு அப்படியே, என்ன உள்ளதோ அப்படியே மற்றும் எப்படியிருந்தாலும் அப்படியே" "எந்த ஒரு புகார் இல்லாத" என்ற அடிப்படையில் 27/05/2026 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது என்று இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

| வ.எண். | கணக்கு எண் | கடன்தாரர் பெயர் | நிலுவைத் தொகை |
|---|---|---|---|
| 1 | 200000656420 | பர்வீன் டிராவல்ஸ் பிரைவேட் லிமிடெட் | ₹.29,86,05,009/- |

| | |
|---|---|
| சுவாதீன நிலை | அசல் சுவாதீனம் |
| குறைந்த பட்ச விலை | ரூ.25,00,00,000/- (ரூபாய் இருபத்தைந்து கோடி மட்டும்) |
| முன்வைப்பு தொகை | ரூ.2,50,00,000/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது லட்சம் மட்டும்) |
| ஏல உயர்வு தொகை | ரூ.2,00,000/- (விலைப்புள்ளி உயர்த்துவதற்காக) |
| சொத்துக்களை பார்வையிடும் தேதி & நேரம் | 21.05.2026 - காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை (தொடர்புக்கு: 9840058893) |
| முன்வைப்பு தொகையுடன் தேவையான ஆவணங்களை சமர்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம் | 26/05/2026 – பிற்பகல் 2.00 மணி |
| மின்ஏல விற்பனை தேதி & நேரம் | 27/05/2026 - காலை 11.00 மணி முதல் 11.30 மணி வரை |
| மின்ஏல போர்டல் பெயர் | https://www.bankeauctions.com |
| சொத்தின் முகவரி | பழைய எண் 25, புதிய எண் 3/67, மோட்டார் ஜோன், சோத்துப்பாக்கம் சாலை, பாலவாயல் கிராமம், ரெட்ஹில்ஸ், சென்னை - 600 052. |
| தொடர்புக்கான முகவரி | அதிகாரபூர்வ அதிகாரி (CBG – LEGAL), எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் : 4 வது தளம், பேஸ் II, எண்.769, ஸ்பென்சர் பிளாசா, அண்ணா சாலை, சென்னை, தமிழ்நாடு - 600002. |
| தெரிந்த பிணைகள் மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் பட்டியல் | i) S.A. எண். 170/2025 ii) S.A. எண். 844/2025 மேற்கண்ட இரு வழக்குகளும் சென்னை, மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம் எண்-3 (DRT-3) இல் நிலுவையில் உள்ளன. |

அட்டவணை சொத்து: வகை எண்.I : திருவள்ளூர் மாவட்டம் மற்றும் அம்பத்தூர் தாலுகா, பாலவாயல் கிராமத்தில் பழைய சர்வே எண்.85/1, புதிய சர்வே எண்.85/1A1B-ன் படி 22 சென்ட் மற்றும் பழைய சர்வே எண்.86/1, புதிய சர்வே எண்.86/1A2B-ன் படி 25 சென்ட் மொத்தம் சேர்த்து 47 சென்ட் பரப்பளவு விவசாய நஞ்சை நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும், மற்றும் எல்லைகள்: வடக்கில்: திரு.சுந்தர்ராமன் அவர்களுக்கு சொந்தமான விவசாய நஞ்சை நிலம், தெற்கில்: திரு.முனியாண்டி மற்றும் திரு.பழவேலமூர்த்தி ஆகியோர்களுக்கு சொந்தமான விவசாய நஞ்சை நிலம், கிழக்கில்: சாலை (வலதுபக்க சாலை), மேற்கில்: சர்வே எண். 84/1A1 (பகுதி). வகை எண்.II : பழைய கதவு எண்.25, புதிய கதவு எண்.3/67, சோத்துப் பாக்கம் சாலை, வடகரை அஞ்சல், செங்குன்றம், சென்னை - 600 052 என்ற முகவரியில் பாலவாயல் ...

இடம் : சென்னை | தேதி : 02.05.2026 — அதிகாரபூர்வ அதிகாரி, எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்காக



**बैंक ऑफ़ बड़ौदा பேங்க் ஆப் பரோடா**

பிராந்திய அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB) சென்னை ரூரல் ரீஜியன், எண்.123, மெஸ்ஸனைன் தளம், துகார் டவர்ஸ், RL சாலை, எழும்பூர், சென்னை-600 008.

Phone: 044-28885428, E-mail: sarcmt@bankofbaroda.bank.in; Web: www.bankofbaroda.bank.in

**அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு**

பிற்சேர்க்கை IV – A யின்படி (விதி 6 (2) மற்றும் 8 (6) யை பார்க்கவும்)
2002-ம்ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் விதிகளின் கீழ் 8(6) & 6(2) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்த பட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ.எண்.1: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் மற்றும் முகவரி : (1) திரு. விஜய்பிரபு, பழைய எண்.10, புதிய எண்.30, RK Nagar, முதல் தெரு, கொருக்குப்பேட்டை, சென்னை ... (3) M/s. JS Garments ...
மொத்த நிலுவைத் தொகை: 30.04.2026 அன்றுள்ளபடி ரூ. 49,05,005.05 மேலும் 01.05.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவினங்கள். சுவாதீனம் நிலை : மெய்நிலை
Latitude : 12.859014 N Longitude: 80.048432 E
குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 21,51,000/- | டேவணித் தொகை ₹ 2,15,100/- | ஏல உயர்வு தொகை ₹ 10,000/-

வ.எண்.2: மொத்த நிலுவைத் தொகை: 30.04.2026 அன்றுள்ளபடி ரூ. 71,83,508.66 மேலும் 01.05.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவினங்கள். சுவாதீனம் நிலை : மெய்நிலை
குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 19,28,000/- | டேவணித் தொகை ₹ 1,92,800/- | ஏல உயர்வு தொகை ₹ 10,000/-

வ.எண்.3: மொத்த நிலுவைத் தொகை: 30.04.2026 அன்றுள்ளபடி ரூ. 81,41,531.85 மேலும் 01.05.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவினங்கள். சுவாதீனம் நிலை : மெய்நிலை
சொத்து 1: குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 16,00,000/- | டேவணித் தொகை ₹ 1,60,000/- | ஏல உயர்வு தொகை ₹ 10,000/-
சொத்து 2: குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 17,00,000/- | டேவணித் தொகை ₹ 1,70,000/- | ஏல உயர்வு தொகை ₹ 10,000/-

வ.எண்.4: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் மற்றும் முகவரி : கடன்தாரர்கள்: 1. திரு. யுகேஷ் லோகநாதன், 2. திருமதி. கஜலட்சுமி யுகேஷ், இருவரின் குடியிருப்பு முகவரி: எண்.157/A, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019. மேலும் ஒரு முகவரி: மனை எண்.86, ஃப்ளாட் எண்.S2, இரண்டாம் தளம், கணபதி இல்லம், ஸ்ரீ இராம ஆஞ்சநேயா கார்டன், சாலமங்கலம் கிராமம், தமிழ்நாடு - 601 301.
மொத்த நிலுவைத் தொகை: 30.04.2026 அன்றுள்ளபடி ரூ. 72,63,212.06 மேலும் 01.05.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவினங்கள். சுவாதீனம் நிலை : மெய்நிலை
Latitude:12.878743 N, Longitude 80.006997E.
குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 23,70,000/- | டேவணித் தொகை ₹ 2,37,000/- | ஏல உயர்வு தொகை ₹ 10,000/-

வ.எண்.5: மொத்த நிலுவைத் தொகை: 30.04.2026 அன்றுள்ளபடி ரூ. 39,18,878.61 மேலும் 01.05.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவினங்கள். சுவாதீனம் நிலை : மெய்நிலை
Latitude, Longitude & Co-ordinates for flat : 12.94190, 80.24168
குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 45,60,000/- | டேவணித் தொகை ₹ 4,56,000/- | ஏல உயர்வு தொகை ₹ 25,000/-

வ.எண்.6: மொத்த நிலுவைத் தொகை: 30.04.2026 அன்றுள்ளபடி ரூ.28,10,533.34 மேலும் 01.05.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவினங்கள். சுவாதீனம் நிலை : மெய்நிலை
வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: அட்டவணை I ) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், புதுவயல் கிராமத்தின் பழைய பட்டா எண். 421, பழைய சர்வே எண்கள். 327/4, புதிய சர்வே எண். 327/4A & 327/4B, பழைய சர்வே எண்கள். 327/5, பழைய சர்வே எண்கள். 327/5A1A & 327/5A1B, பழைய பட்டா எண்.1043 & 1044, புதிய சர்வே எண்.327/15, புதிய பட்டா எண்.1055 இல் அடங்கிய, துணைப்பிரிவு அங்கீகார எண்.0930/2022/A3 மனை எண். 6இன் விஸ்தீரணம் 978சதுர அடி காலி நிலம் அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில்: மனை எண்.5 தெற்கில்: மனை எண்.7, கிழக்கில்: பவானி கார்டன் பேஸ் 1 மனைப்பிரிவு (மனை எண்.11), மேற்கில்: 20 அடி சாலை. நாற்புறப்புகள்: வடக்கில்: 32.8, தெற்கில்: 33.10, கிழக்கில்: 29.10,மேற்கில்: 30; மொத்த விஸ்தீரணம் 978சதுர அடி மட்டும் அட்டவணை II ) திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், புதுவயல் கிராமத்தின் பழைய பட்டா எண். 421, பழைய சர்வே எண்கள். 327/4, புதிய சர்வே எண். 327/4A & 327/4B, பழைய சர்வே எண்கள். 327/5, பழைய சர்வே எண்கள். 327/5A1A & 327/5A1B, பழைய பட்டா எண்.1043 & 1044, புதிய சர்வே எண்.327/16, புதிய பட்டா எண்.1056 இல் அடங்கிய, துணைப்பிரிவு அங்கீகார எண்.0930/2022/A3 மனை எண். 7இன் விஸ்தீரணம் 830சதுர அடி காலி நிலம் அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில்: மனை எண்.6, தெற்கில்: மனை எண்.8, கிழக்கில்: பவானி கார்டன் பேஸ் 1 மனைப்பிரிவு (மனை எண்.12), மேற்கில்: 20 அடி சாலை. நாற்புறப்புகள்: வடக்கில்: 33.10, தெற்கில்: 34.7, கிழக்கில்: 25,மேற்கில்: 24,; மொத்த விஸ்தீரணம் 830சதுர அடி மட்டும். Latitude: 13.333894N Longitude 80.145847 E
குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 32,58,000/- | டேவணித் தொகை ₹ 3,25,800/- | ஏல உயர்வு தொகை ₹ 10,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்: (வ.எண்.1 முதல் 6 வரை): 15.05.2026 — வ.எண் 1 : பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை; வ.எண் 2 முதல் 6 வரை: பிற்பகல் 3 மணி முதல் மாலை 5 மணி வரை

மின் ஏல தேதி & நேரம் (வ.எண்.1 முதல் 6 வரை): 21.05.2026 அன்று மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை — வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

விதிமுறைகள் & நிபந்தனைகளை அறிய இங்கு ஸ்கேன் செய்யவும்

மேலும் விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணையதளமான https://bankofbaroda.bank.in/e-auction & ஆன்லைன் விற்பனைக்கான https://baanknet.com. இணையதள இணைப்பை பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரியை தொலைபேசி: 044-28885428 எண்ணிலும் கைபேசி எண். 9987478064 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளவும்

தேதி : 02.05.2026 இடம்: சென்னை — அதிகாரபூர்வ அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா